**சுருக்கம்**

சென்னை மாநகராட்சி – பெரம்பூர் கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் பணி – திட்ட மதிப்பீடுத்தொகை ரூ.61.70 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை**

அரசாணை (நிலை) எண்.115 நாள்: 06.07.2009

ஆனி – 22,
திருவள்ளுவர் ஆண்டு – 2040,

**படிக்கவும்:**

சென்னை மாநகராட்சி ஆணையர் கடித பா.து.ந.க. எண்.பி3/371/2008, நாள்.16.05.2008, 20.06.2008, 18.09.2008, 04.03.2009, 24.04.2009 மற்றும் 28.05.2009

* * * * *

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதங்களில் சென்னை மாநகரில் நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகளில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டு, போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளான தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் மற்றும் கணேசபுரம் சுரங்கப்பாதையில் மேல் மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்கு போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு, வரைபடப் பணிகளை மேற்கொள்ள Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited மூலமாக கலந்தறிதற்குரியவர் திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டனர் என்றும் Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited மற்றும் ஒருங்கிணைப்புக்குழு (Co-ordination committee)ஆகியோர் கலந்துக்கொண்ட கலந்தாய்வு கூட்டத்தில் கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்களால் பெறப்பட்ட கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டது என்றும், மேற்கண்ட கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வரைபடத்தின்படி பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் நில ஆர்ஜிதம் செய்ய பூர்வாங்க பணிகள் மற்றும் பெறப்படும் வடிவமைப்பின்படி மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக மன்றத்தீர்மான எண்.641/2007, நாள்.29.12.2007ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவித்து உள்ளார். மேலும் கலந்தறிதற்குரியரான திருவாளர்கள் முகேஷ் அசோசியட்ஸ் அவர்கள் மேற்கண்ட பணிக்கான வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு அளித்துள்ளனர் என்றும், கலந்தறிதற்குரியவர் அளித்த வடிவமைப்பை சரிபார்க்கும் பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, தற்போது பி.இ.எம்.எஸ் நிறுவனம் மூலமாக சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது என்றும் அவர் தெரிவித்து உள்ளார்.

2. மேற்கண்ட மேம்பாலப்பணியினை மேற்கொள்ள சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் தனது நிலத்தடிக்குழாய்களை மாற்றியமைப்பதற்காக ரூ.8,22,23,000/–க்கு மதிப்பீடு அளித்துள்ளது. மேலும் தமிழ்நாடு மின்சாரவாரியம் தனது கம்பி வடங்களை

மாற்றியமைக்க ரூ.13,16,425/—க்கு மதிப்பீடு அளித்துள்ளது. மேற்கண்ட சேவைத்துறையினரின் நிலத்தடிக்குழாய்கள் மற்றும் கம்பி வடங்களை மாற்றுவதற்கு முன்பணம் செலுத்த வேண்டியுள்ளதால், இம்மேம்பாலம் அமைக்கும் பணிக்காக 2008—2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்படி ரூ.61,70,00,000/—க்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், இத்தோராய மதிப்பீட்டு தொகைக்கு மன்ற ஒப்புதல் தீர்மான எண்.151/2008, நாள்.03.05.2008ன்படி பெறப்பட்டுள்ளது என்றும் ஆணையர் கூறியுள்ளார். இம்மேம்பால திட்டத்தின் மதிப்பீட்டில் Superior Supervision Charges 10%. Petty Supervision charges and contingencies 5% கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் பெருந்திட்டம் என்பதால் 15 சதவீதம் மேற்பார்வை செலவினமாக அவசியமாகிறது என்றும் இத்திட்டம் TNUDF, TUFIDCO மற்றும் Transfer of Development Rights மூலமாகவும் நிதியுதவி பெற்று பணி நடைமுறைபடுத்தப்படவுள்ளது என்றும் ஆணையர் கூறியுள்ளார்.

3. மேற்குறித்த சூழ்நிலையில் பெரம்பூர் கணேசபுரம் சுரங்கப்பாதை மேல் மேம்பாலம் அமைக்கும் பணிக்கான திட்டமதிப்பீட்டுத்தொகை ரூ.61.70 கோடிக்கு ஆட்சிமுறை ஒப்பளிப்பு வழங்க சென்னை மாநகராட்சி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு ஆழ்ந்து பரிசீலித்தபின், சென்னை மாநகராட்சி ஆணையர் 2009 – 2010 ஆம் ஆண்டிற்கான விலைவிகிதப்படி திருத்திய நிர்வாக ஒப்புதல் அரசிடம் பெறவேண்டும் என்ற நிபந்தனையுடன், பெரம்பூர் கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் பணிக்கான திட்டமதிப்பீட்டுத் தொகை ரூ.61.70 கோடிக்கு (ரூபாய் அறுபத்தியொரு கோடியே எழுபது லட்சம் மட்டும்) அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடுகிறது.

5. இவ்வாணை 21.06.2009 நாளிட்ட நிதித்துறை அ.சா.எண்.1614/FS/P/2009 ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
மாநில கணக்காயர், சென்னை – 18/35
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
தலைமைச் செயலரின் தனி செயலர், சென்னை – 9
நிதித்துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்